**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : பெருமாள் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். அன்றையதினம் இரவு சுமார் 07:00 -07:30 மணியளவில் குளத்துப்பட்டியில் ரோட்டின் மேலே உள்ள எனது வீட்டில் நான் இருந்தபோது டமார் என்று சத்தம்கேட்டு நான் ஓடிவந்து பார்த்தபோது வண்டி ஒன்று பாண்டியை அடித்துவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. ரோட்டின் வடக்கு பக்கம் புளியமரத்தை ஒட்டி அடிபட்டு கிடந்தார். அவரது கால் தார் ரோட்டிலும், தலை மண்தரையிலுமாக கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு தலையிலும், கை, காலிலும் அடிபட்டு இருந்தது. சம்பவத்தின்போது அங்கு பாண்டி, பால்பாண்டி, சோனைமுத்து, ஆகியோரும் சம்பவயிடத்தில் இருந்தார்கள். அடிபட்ட பாண்டி அவரது மகளை பஸ் ஏற்றிவிடுவதற்காக பேத்தியுடன் வந்திருந்தார். அடிபட்ட பாண்டியை ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன்பிறகு மதுரைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம், மறுநாள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் இறந்ததற்கு

இழப்பீடு பெறுவதற்காக அசா.1 கொடுத்து பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Perumal

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.